# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட்,

நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590.


**ஆணை நாள்.12.05.2026**

**முன்னிலை**

**திரு.ரா.பிரியகுமார், பி.எஸ்.சி, பி.எல்.,**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்கள்.SA 14330,14331,14332/B/2025**

திருமதி.J.பிரேமா ... மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொது தகவல் அலுவலர்,
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது)(பொ),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கடலூர் மாவட்டம்-607001. ... பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வழக்குகளின்மீது இவ்வாணையத்தால் (03.12.2025) அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவினைத் தொடர்ந்து (12.05.2026) இன்று நடத்தப்பட்ட நேரடி விசாரணைக்கு பொது அதிகார அமைப்பின் சார்பாக பொது தகவல் அலுவலர், திரு.ம.செல்வன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), கடலூர் மாவட்டம் அவர்கள் ஆணையத்தின்முன்பு நேரில் ஆஜராகி மனுதாரருக்கு 23.03.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல் வழங்கியதாகத் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை ஆணையத்தின் பார்வைக்குச் சமர்ப்பித்தார்.

2. மனுதாரர் கோரிய தகவலானது தனது கணவரின் அண்ணனான திரு.ராஜசேகரன், த/பெ ராமலிங்கம் அவர்களின் பணி பதிவேட்டு நகலை வழங்குமாறு கேட்ட போது, அதற்கு கடலூர் மாவட்ட பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் மேற்படி திரு.ராஜசேகரன் அவர்கள் கடலூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளராக பணிபுரிந்ததற்கான எந்த ஆவணமும் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே மனுதாரர் கோரும் ஆவணத்தை வழங்க இயலாது என பதில் அளித்துள்ளார். ஆனால் மனுதாரர் தரப்பில் சமர்ப்பிக்கப்பட்ட விளக்கத்தின் படி, மேற்படி திரு.ராஜசேகரன் த/பெ ராமலிங்கம் என்பவர் 1967-ஆம் ஆண்டு வருவாய் துறையில் பணியில் சேர்ந்து, பின்னர் பதவி உயர்வுகள் பெற்று, ஒருங்கிணைந்த கடலூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளராக பணிபுரிந்து, 1985-ஆம் ஆண்டு விருப்ப ஓய்வு பெற்றுள்ளார். மேலும் அவரது பணிபதிவேட்டின் அடிப்படையில் 1985-ஆம் ஆண்டு முதல் 2002-ஆம் ஆண்டு வரை கடலூர் மாவட்ட சார் கருவூலத்தின் மூலம் ஓய்வூதியம் பெற்று வந்துள்ளார். அதனைத் தொடர்ந்து, செப்டம்பர் 2002-ஆம் ஆண்டு அவர் இறந்த பின்னர் அவரது மனைவியான திருமதி.சாந்தா அவர்கள் 2022-ஆம் ஆண்டு வரை கடலூர் மாவட்ட

சார் கருவூலர் அலுவலத்தில் Live Certificate-யினை சமர்ப்பித்து குடும்ப ஓய்வூதியம் பெற்று வந்துள்ளார். பணியாளருக்கோ, பணியாளரின் மனைவிக்கோ பணியாளரின் பணி பதிவேடு மற்றும் அதனுடன் தொடர்புடைய ஆவணங்கள் இல்லாமல் ஓய்வூதியமோ அல்லது குடும்ப ஓய்வூதியமோ வழங்க இயலாது என்பது இயல்பான நிர்வாக நடைமுறையாகும். இத்தகைய சூழ்நிலையில் சம்பந்தப்பட்ட ஆவணங்களை முறையாக தேடி ஆராயாமல், “ஆவணங்கள் இல்லை” என கடலூர் மாவட்ட பொது தகவல் அலுவலர் வழங்கிய பதிலானது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை என்று மனுதாரர் வாதிட்டார். மேலும் இறந்துபோன திரு.ராஜசேகரன் அவர்களின் பணி பதிவேட்டினையும், அவர் பணிகாலத்தில் தமிழக அரசின் முன் அனுமதி பெற்று வாங்கிய அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் தொடர்பான விவரங்களையும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வழங்கிட வேண்டுமென மனுதாரர் கோரிக்கை வைத்தார்.

3. பொது தகவல் அலுவலரால் 20.03.2026 அன்று வழங்கப்பட்ட பதிலில், “திரு.இராஜசேகரன் த/பெ. T.N. ராமலிங்கம் என்பவர் 40 ஆண்டுகளுக்கு முன்னர் கடலூர் மாவட்டத்தில் பணிபுரிந்து விருப்ப ஓய்வு பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், அத்தகைய நபர் யார் என அறிய இயலவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தகைய பதில் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று இந்த ஆணையம் கருதுகிறது. ஏனெனில், திருமதி.சாந்தா ராஜசேகரன் அவர்கள் 2022-ஆம் ஆண்டு வரை குடும்ப ஓய்வூதியம் பெற்றுவந்திருப்பது மறுக்க முடியாத நிர்வாகச் சான்றாகும். ஆகையால், அதனுடன் தொடர்புடைய பணி பதிவேடு, ஓய்வூதிய ஆவணங்கள் மற்றும் பிற பதிவுகள் சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் கண்டிப்பாக இருக்க வேண்டியது அவசியமானதாகும் என்று இந்த ஆணையம் கருதுகிறது. இந்நிலையில் பொது தகவல் அலுவலர், கடலூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் அவர்களால் 40 ஆண்டுகளுக்கு முன்பு ஓய்வு பெற்றதாக குறிப்பிட்டிருக்கும் நிலையில், அத்தகைய நபர் யார் என்றே அறிய இயலவில்லை என்று வழங்கப்பட்ட தகவலானது சம்பந்தப்பட்ட கோப்புகளை முறையாக ஆய்வு செய்யாமல் அல்லது தேவையான அலுவலகங்களில் இருந்து தகவல் சேகரிக்காமல் வழங்கப்பட்ட தகவலாக தெரிகிறது. இது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லையெனக்கருதி ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது:-

**ஒரு பொது அதிகார அமைப்பில் 1967-ஆம் ஆண்டு முதல் 1985-ஆம் ஆண்டு வரை அரசுப் பணியில் இருந்து, பதவி உயர்வுகள் பெற்று, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளராக பணியாற்றிய ஒருவரை அடையாளம் காண இயலவில்லை என்று கூறுவது நிர்வாக ரீதியாக ஏற்றுக்கொள்ள முடியாததாகும் என்று இந்த ஆணையம் கருதுகிறது. அத்துடன், 2022-ஆம் ஆண்டு வரை குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டிருப்பதால், அதற்கான கோப்புகள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் இருப்பது இயல்பான ஒன்றாகும். ஆகையால், சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் இருந்து தேவையான தகவல்களையும், முழுக்கோப்புகளையும் பெற்று, அந்த கோப்புகளுடன் 05.06.2026 அன்று முற்பகல் 11.00 மணியளவில் ஆணையத்தின்முன்பு நேரடியாக ஆஜராகுமாறு பொது தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது), கடலூர் மாவட்டம் அவர்களுக்கு உத்தரவிடப்படுகிறது. அன்று நடைபெறவிருக்கும் விசாரணைக்கு மனுதாரரும் நேரில் ஆஜராகும்படி உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(ரா. பிரியகுமார்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**வழக்கு எண்கள்.SA 14330,14331,14332/B/2025**

## பெறுநர்

1. பொது தகவல் அலுவலர்,
   மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது)(பொ),
   மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
   கடலூர் மாவட்டம்-607001.

2. மேல்முறையீட்டாளர்,
   திருமதி.J.பிரேமா க.பெ.ஜெயக்குமார்,
   எண்.5, கபிலர்புரம்,
   சந்தபேட்டை,
   திருக்கோவிலூர் தாலுகா,
   கள்ளக்குறிச்சி மாவட்டம்-605766.

Copy to: File. GP PC
220526

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005